**செய்தி வெளியீடு** **நாள் : 31.10.2023**

**செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையம் வெகுவிரையில் மக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி, இன்று (31.10.2023) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுவரும் புதிய பேருந்து முனையத்தில் மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் பேருந்து முனையத்தில் புதிய காவல் நிலையம் அமைத்தல், பூங்கா அமைத்தல், மாநகர பேருந்து நிலையம் முகப்பு வளைவு அமைத்தல் தொடர்பாகவும், முனையத்திலிருந்து அரசு பேருந்துகள் போக்குவரத்து நெரிசலின்றி இயக்குவது தொடர்பாகவும், முனையத்தையொட்டியுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் சாலை விரவாக்கப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாக தேசிய நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி, செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் புதியதாக 86 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 400 கோடியில் திட்டமிடப்பட்ட இந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் 2013 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு 2019 ஆம் ஆண்டு இப்பணிகள் துவங்கப்பட்டன. ஏற்கெனவே திட்டமிடல், போக்குவரத்து நெரிசல், பருவ மழைக்காலங்களில் ஏற்படுகின்ற வெள்ளம், அதேபோல் பயனாளிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகளை முழுமையாக திட்டமிடல் இல்லாததால், ஏற்கெனவே திட்டமிட்ட பணி டெண்டர் கோரப்பட்ட விலையை விட சுமார் 100 கோடி ரூபாய் அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக மாற்றுவழிகலாக கிளாம்பாக்கம் பேருந்து முனையம் பயன்பாட்டிற்கு வந்தபிறகு 3 இடங்களில் சாலைகளை விரிவாக்கம் செய்து புதிய சாலைகளை போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதில் கூடுவாஞ்சேரி முதல் மாடம்பாக்கம் சாலை வரை ஒரு சாலையும் ஆதனூர் முதல் மாடம்பாக்கம் வரை ஒரு சாலையும், வண்டலூர் வாலஜா மற்றும் மாடம்பாக்கம் இணைக்கும் சாலை ஒன்றும், அதேபோல் ஐயனஞ்சேரி முதல் மீனாட்சிபுரம் வரை இணைக்கின்ற ஒரு சாலையும், போலிஸ் அகடாமி சாலையில் அமைந்திருக்கின்ற வனத்துறைக்கு சொந்தமான இரண்டு கிலோ மீட்டர் நீலமுள்ள சாலையும் விரிவாக்கம் செய்வதற்காகவும், சாலைகளை அமைக்கும் பணிகளும் புதியதாக ஏற்படுத்தப்பட்ட பணி. அதேபோல் மழைக்காலங்களில் வெள்ளம் ஏற்படுகின்றபோது மழைநீர் உடனடியாக வடிவதற்கான கட்டமைப்புகள் இல்லாததால் சுமார் 13 கோடி செலவில் புதியதாக மழைநீர் கால்வாய் 1250 மீட்டர் நீலத்திற்கு அமைக்கின்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருகின்றன.

அதோடு கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் அதிகமான முழு பயன்பாட்டிற்கு வருகின்றபொழுது தேவையான அளவு பயணிகள் பயன்பாட்டிற்காக ஒரு காவல் நிலையம் 13 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட இருக்கிறது. அதேப்போல் காவல் நிலைய தொல்லிய பூங்கா ஒன்று ஏற்படுத்துவதற்கு டெண்டர் கோரப்பட்டு 50 சதவித பணிகள் முடிந்திருக்கின்றன. பேருந்து முனையத்திற்கு வருகின்ற பயனாளிகளுக்கு பொழுதுபோக்கு அம்சமாக ஏற்கெனவே ஒரு பூங்கா முழுமையாக முடிக்கப்பட்டு பேருந்து நிலையம் திறக்கப்படும்பொழுது அந்த பூங்காவும் மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட இருக்கின்றது. அதேப்போல் புதியதாக ஒரு நுழைவாயிலை அமைக்கின்ற பணியும் இன்னும் 40 நாட்களுக்குள் நிறைவு செய்யப்பட உள்ளது. வருகின்ற பயணிகளுக்கு தேவையாக அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கப்படுகின்ற வகையில் இந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

அதேப்போல் ஆம்னி பேருந்துகளுக்கென்று தனியாக ஒரு பேருந்து முனையம் முடிச்சூரில் பணிகள் வேகமாக நடந்து வருகின்றது, அந்தப்பணியையும் எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது. ஒட்டுமொத்தமாக நவம்பர் மாதம் 15-ஆம் தேதியிலிருந்து 20-ஆம் தேதிக்குள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற அனைத்து பணிகளையும் முடிக்க வேண்டுமென்று இந்த ஆய்வு கூட்டத்தில் துறையினுடைய செயலாளர் அன்புற்கினிய திரு.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களையும், அதேப்போல் துறையினுடைய உறுப்பினர் செயலாயர் அன்பிற்கினிய திரு.அன்சூல் மிஸ்ரா, இ.ஆ.ப அவர்களும் நம்முடைய இம்மாவட்டத்துடைய ஆட்சித் தலைவர் திரு. ராகுல் நாத், இ.ஆ.ப அவர்களும் இன்றைக்கு முழுமையாக இந்த பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை பத்திரிக்கையாளர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்திருக்கின்றோம்.

ஆகவே ஒவ்வொரு பணிக்கும் கால நிர்ணயத்தை ஏற்படுத்திதந்து இந்த காலகட்டத்திற்குள் முடிக்கவேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறோம். அதோடு மட்டுமில்லாமல் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** பெருகி வருகின்ற மக்கள் தொகை, தேவைப்படுகின்ற போக்குவரத்து வசதிக்கு இந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதால் தொடர்ந்து வாரம் ஒரு முறையாவது இந்த கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தின் பணிகள் முன்னேற்றத்தை குறித்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** கேட்டறிந்திருக்கிறார்கள் அந்த வகையில் துறை சார்ந்த அதிகாரிகள், துறையின் செயலாளர், உறுப்பினர் செயலாளர் ஆகிய இருவரும் தினந்தோறும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் நடைப்பெறுகின்ற பணிகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறார்கள் அந்த வகையில்தான் இந்த பணிகள் இவ்வளவு வேகமான முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றது. வெகுவிரையில் மக்கள் பயன்பாட்டிற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** பொற்கரங்களால் இந்த பேருந்து நிலையம் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணைய (CUMTA) சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ராகுல்நாத், இ.ஆ.ப., அவர்கள், காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) திரு.ந.குமார் அவர்கள், சி.எம்.டி.ஏ, கண்காணிப்பு பொறியாளர் திரு.என்.சீனிவாச ராவ் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.